Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY,JANUARY 28, 2025

செவ்வாய்க்கிழமை 28, ஜனவரி 2025 | ஒளி: 10 கதிர்: 146 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## வாக்காளர் பதிவு

■ எம்.யூ.எம்.சனூன்

வாக்காளர் பட்டியலில் இணைப்பதற்காக, தற்போது 2025 ஆம் ஆண்டிற்குரிய வாக்காளர் பதிவு இடம்பெறுகிறது.

2007 ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பிறந்தோரும், இதுவரையும் வாக்காளர் பட்டியலில் பதியப்படாதோரும், உடனடியாக தங்களுடைய கிராம உத்தியோகத்தரை சந்தித்து பதிந்து கொள்ளுமாறு கேட்கப் கொள்ளப்பட்டுள்ளனர். ஜனவரி 31 இறுதி திகதியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# நாயை தூக்கிலிட்ட பெண் கைது

நாய் ஒன்று தூக்கிலிடப்படுவதை சித்தரிக்கும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டன. அதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் 48 வயதுடைய பெண்ணைக் மாங்குளம் பொலிஸார் கைது செய்தனர். நாயொன்றை மரத்தில் தூக்கிலிட்டு கொன்றார் என்றக் குற்றச்சாட்டின் பேரிலேயே அப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாங்குளத்தைச் சேர்ந்த சந்தேக நபரான அந்தப் பெண், குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் 1907 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டானில் உள்ள ஒரு மத்தியஸ்த சபை, ஆட்டை கடித்த நாயை ஆட்டின் உரிமையாளரிடம் கையளிக்குமாறு தீர்ப்பளித்துள்ளார்.

இதுதொடர்பில், விலங்குகள் நல கூட்டணி (Animal Welfare Alliance) விடுத்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டு குழுக்களுக்கு இடையேயான மோதலைத் தீர்க்க இந்த முடிவை மத்தியஸ்த சபை எடுத்ததாக கூறப்படுகிறது.

AWA நிர்வாகக் குழு உறுப்பினர் டாக்டர் சமித் நாணயக்கார, நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு இந்த சம்பவம் குறித்து கடிதம் அனுப்பியுள்ளார்.

கடிதத்தின்படி, இந்த சம்பவம் சனிக்கிழமை (25) அன்று பதிவாகியுள்ளது. இரு குழுக்களுக்கிடையிலான மோதலுக்கு தீர்வாக ஒட்டுசுட்டானில் உள்ள மத்தியஸ்த சபை நாயை, ஆட்டின் உரியமையாளரிடம் கையளிக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.



சின்ன தேர்தலுக்கான மனுக்கள் மீதான விசாரணை நிறைவு:

# வியாக்கியானம் விரைவில்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான சிறப்பு ஏற்பாடுகள் சட்டமூலத்தில் சில சரத்துக்களை அரசியலமைப்புக்கு முரணானவை என அறிவிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவின் விசாரணையை முடித்த உயர் நீதிமன்றம், அந்த முடிவை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மற்றும் சபாநாயகருக்கு அனுப்புவதாக திங்கட்கிழமை (27) அறிவித்தது.

இந்த மனுக்கள் உயர் நீதிமன்ற நீதியரசர்களான யசந்த கோடகொட, ஜனக் டி சில்வா மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய அடங்கிய நீதியரசர்கள் அமர்வு முன் விசாரிக்கப்பட்டன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிஜாம் காரியப்பர், தேசிய ஜனநாயக முன்னணியின் வழக்கறிஞர் கோஷல்யா ஜெயவீர, முன்னாள் கல்கிஸை மேயர் உபுல் கமகே, கடுவல மாநகர சபை உறுப்பினர் ஷிரந்த பெரேரா உள்ளிட்ட குழுவினர் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

மனுதாரர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் தங்கள் வாதங்களை முன்வைத்தனர், தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை ரத்து செய்து புதிய வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் அரசாங்கம் இந்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இது வேட்புமனுக்களை சமர்ப்பித்த வேட்பாளர்களுக்கு பெரும் அநீதி இழைக்கும் என்றும், இந்த சட்டமூலத்தில் சில பிரிவுகள் அரசியலமைப்பிற்கு முரணானவை என்றும் வழக்கறிஞர்கள் கூறியுள்ளனர். அவை நிறைவேற்றப்பட வேண்டுமானால், அவை நிறைவேற்றப்பட வேண்டும் என்ற தீர்ப்பை பிறப்பிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனர். பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டு,

தொடர்ச்சி P2



# "பழிவாங்கும் நோக்கமல்ல"



அமைச்சர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சலுகைகளை வழங்கும் அரசியல் கலாச்சாரத்திற்கு தற்போதைய அரசாங்கம் முற்றுப்புள்ளி வைத்துள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, ஜனாதிபதியும் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அவ்வாறு நடந்து கொண்டாலும்,

தொடர்ச்சி P2




# யோஷிதவுக்கு பிணை

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றப்புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ, கொழும்பு மேலதிக நீதவான் மஞ்சுள ரத்நாயக்கவால் பிணை வழங்கப்பட்டது.

தொடர்ச்சி P2



# பென்சில்கள் தொடர்பில் எச்சரிக்கை

பாடசாலை மாணவர்களுக்காக பென்சில் மற்றும் வர்ண பூச்சுகளைக் கொள்வனவு செய்யும் போது அவற்றின் தரம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என சுகாதாரத் துறையினர் வலியுறுத்தியுள்ளனர்.

தொடர்ச்சி P2

# "பொருத்தமான வீடு தருவோம் போங்கள்"

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு குடியிருக்க வீடு இல்லையென்றால் அரசாங்கம் அதற்குப் பொருத்தமான வீட்டை வழங்கும் என ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தம்புத்தேகமவில் ஞாயிற்றுக்கிழமை (26) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி, தானும் தனது அமைச்சர்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளுக்கு இதுவரை செல்லவில்லை என்றும், முன்னாள் ஜனாதிபதிகள் அரச இல்லங்களிலிருந்து வெளியேற ஏன் சிரமப்படுகின்றனர் என்றும் கேள்வி எழுப்பினார்.

தொடர்ச்சி P2

# மற்றுமொருவரின் பட்டமும் நீக்கம்



பொது நிர்வாகம், மாகாண சபைகள் அமைச்சர் சந்தன அபேரத்னவின் பெயருக்கு முன்னால் பேராசிரியர் என்ற பட்டத்தைக் குறிப்பிட வேண்டாம் அறிவுறுத்தியுள்ளார்.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூத்த உதவிச் செயலாளர் (நிர்வாகம்) அமைச்சின் பிரிவு தலைவர்களுக்கு எழுத்துப்பூர்வமாக அறிவித்துள்ளார்,

தொடர்ச்சி P2

# "எங்களைப் பழிவாங்க வேண்டாம்"



அரசியல்வாதிகள் மற்றும் அவர்களது குடும்பங்களை இலக்காகக் கொள்ளாமல் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசாங்கம் தனது நேரத்தைச் செலவழித்தால், அது பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், மேலும் குடிமக்கள் ஒரு நாளைக்கு மூன்று வேளை உணவுண்ண உதவுவதுடன் அது மிகவும் பயனுள்ளதாக அமையும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

வடக்கு,கிழக்கில்

# "சுதந்திர தினத்தன்று கரி நாளுக்கு வாருங்கள்"

■ நிதர்ஷன் வினோத்

இலங்கையின் 77 வது சுதந்திர தினமான பெப்பவரி 4 ஆம் நாளை கறுப்பு நாளாக நினைவு கூர்ந்து தமிழ் மக்களின் வலிகளையும் உணர்வுகளையும் உலகுக்கு மட்டுமல்லாமல் அனுர அரசுக்கும் எடுத்துக் கூறுவதற்கு அணிதிரளுமாறு வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.




தொடர்ச்சி P2

# இந்திய இல்லத்தில் விருந்துபசாரம்

இந்தியாவின் 76 ஆவது குடியரசு தினமான ஜனவரி 26 ஆம் திகதியன்று இலங்கைக்கான இந்திய உதவி உயர்ஸ்தானிகர், டாக்டர் சத்யஞ்சல் பாண்டே தலைமையில், கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் இரவு விருந்துபசாரம் இடம்பெற்றது. இதில், பிரதமர் கலாநிதி ஹரின் அமரசூரிய, அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உள்ளிட்ட அமைச்சர்கள், முன்னாள் ஜனாதிபதிகள்,முன்னாள், இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் பங்கேற்றனர்.





PAGE 1 தொடர்ச்சிகள்



# வியாக்கியானம் விரைவில்

பின்னர் வாக்கெடுப்பு மூலம் அங்கீகரிக்கப்பட்டவேண்டும் என்றும் கோரிநின்றனர்.

பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நிர்மலன் விக்னேஸ்வரன், இந்த சட்டமூலத்தை அறிமுகப்படுத்தியதன் முதன்மை நோக்கம், சட்டமூலத்தில் உள்ள பலவீனங்களை களைந்து, புதிய வாக்காளர்களுக்கு வாய்ப்பளித்து அவர்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதாகும் என்று கூறினார்.

இந்த சட்டமூலம், மக்களின் சர்வஜன வாக்குரிமையைப் பாதுகாக்கிறது மற்றும் அவர்களின் அடிப்படை உரிமைகளை உறுதி செய்கிறது என்று மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் கூறினார். இந்த மசோதா எந்த அடிப்படை உரிமைகளையும் மீறவில்லை என்றும், இந்த மசோதாவை உறுப்பினர்களின் எளிய பெரும்பான்மையின் ஒப்புதலுடன் நிறைவேற்ற முடியும் என்றும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நிர்மலன் விக்னேஸ்வரன் எடுத்துரைத்தார்.

இரு தரப்பு வாதங்களையும் பரிசீலித்த உயர் நீதிமன்றம், இந்த மனு மீதான தனது முடிவை எதிர் காலத்தில் ஜனாதிபதி மற்றும் சபாநாயகருக்கு அனுப்புவதாக அறிவித்தது.

மனுதாரர்கள் சார்பில் வழக்கறிஞர் பூபதி கஹபிட்டிய மற்றும் வழக்கறிஞர்களான விராஜா சில்வா மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோர் ஆஜரானார்கள். பிரதிவாதிகள் சார்பாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நிர்மலன் விக்னேஸ்வரன் ஆஜரானார்.

# "பழிவாங்கும் நோக்கமல்ல"

முன்னாள் தலைவர்கள் தங்கள் வீண்விரய வாழ்க்கையை தங்களின் உரித்தாக கருதுவதாகவும் தெரிவித்தார்.

பழைய வீண்விரய வடிக்கைகள் குறித்து தான் எதுவும் கூறப்போவதில்லை என்றும், இன்று முதல் புதிய அரசியல் கலாச்சாரத்தில் இணையுமாறு அவர்களை அழைப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

அநுராதபுரம் விவேகானந்த விளையாட்டு மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (26) பிற்பகல் நடைபெற்ற நட்புறவுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

சில காரணிகள் தொடர்பில் கவனம் செலுத்தியே தற்போதைய அரசாங்கத்தை மக்கள் ஆட்சிக்குக் கொண்டு வந்ததாகவும் தற்போதுள்ள அரசியல் கலாசாரத்தை மாற்றுவதும், வீண்விரயம் மற்றும் ஊழலை முடிவுக்குக் கொண்டுவருவதும் மக்களின் பிரதான அபிலாஷை என்றும் நினைவு கூர்ந்த ஜனாதிபதி, வீண்விரய அரசியல் முறைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கையில் அதனை அரசியல் பழிவாங்கலாக சித்தரிக்க முயல்வதாகவும் தெரிவித்தார்.

மக்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேலும் கூறியதாவது:

இலங்கை வரலாற்றில், ஆட்சி அதிகாரம் தலைமுறை தலைமுறையாகவே கைமாறியது. தாய் பிரதமராக இருந்ததால் மகளுக்கு அதிகாரம் கிடைத்தது. மூத்த சகோதரர் ஜனாதிபதியாக இருந்ததால் இளைய சகோதரருக்கு அதிகாரத்தைப் பெற்றுக் கொடுத்தார். மாமா ஜனாதிபதியாக இருந்ததால் மருமகன் ஜனாதிபதியானார்.

நமது நாடு பாரியளவில் வங்குரோத்தடைந்து விட்டது. தற்போதைய அரசாங்கத்தால் அந்த நிலைமையைச் சீர்செய்து, கடந்த டிசம்பரில் கடன் மறுசீரமைப்பு செயல்முறையை நிறைவு செய்ய முடிந்தது. அதனோடு அதுவரை இருந்த வங்குரோத்து நிலையிலிருந்து இலங்கையை மீட்க்க தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் முடிந்தது.

பொது மக்களைக் கவனித்துக் கொள்ள தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஓய்வூதியதாரர்களிடையிலான சம்பள முரண்பாட்டை நீக்க நாம் நடவடிக்கை எடுத்தோம். அத்தோடு அஸ்வெசும வழங்கப்படும் குழுக்கள் தொடர்பாக எதிர்வரும் ஜூன் மாதத்தில் மீளாய்வு செய்ய எதிர்பார்க்கிறேன். உதவி கிடைக்க வேண்டிய தரப்பினர்களை இலக்காகக் கொண்டு உதவி வழங்கும் திட்டமொன்றைச் செயல்படுத்த நாங்கள் எதிர்பார்க்கிறோம். உதவி கிடைக்க வேண்டிய தரப்பினர்களுக்கு உதவு வழங்குவதே உலகில் அநேக அரசாங்கங்களின் திட்டமாகும். அதற்கு துல்லியமான தரவுகள் திரட்டப்பட வேண்டும்.

இதுவரை, பிரஜைகளின் கண்ணோட்டத்தில் அன்றி அரசியல் கண்ணோட்டத்தில் தான் உதவிகள் வழங்கப்பட்டன என்பதை நாம் அறிவோம். எனவே, உதவி பெறத் தகுதியான குடிமக்களை முறையாகப் பராமரிப்பதற்கான ஒரு குறிப்பிட்ட திட்டத்தை வகுப்பதே எங்கள் நோக்கமாகும். இந்தத் திட்டங்களுக்கு மக்களின் வரிப் பணம் தான் பயன்படுத்தப்படுகிறது. எனவே, ஒரு குறிப்பிட்ட, இலக்கு வைக்கப்பட்ட திட்டத்தை செயல்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

நம் நாட்டில் இயற்கை வளங்கள் குறித்து கவனம் செலுத்தப்படுவதில்லை. நமது கனிம வளங்களுக்கு பெறுமதி சேர்க்க எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, கனிம வள மேம்பாட்டுக்கான தொழிற்சாலையை திறக்க திட்டமிட்டுள்ளோம். அனுராதபுரம் நகரில் 07 பழமையான நீர்ப்பாசன முறைமைகள் உள்ளன. அந்த ஏழு நீர்ப்பாசன முறைகளை மீளமைக்க நடவடிக்கை எடுப்போம். இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதியை உரிய திட்டங்களுக்கு செலவிட நடவடிக்கை எடுப்போம். இந்த செயற்பாடுகள் மூலம் பொருளாதாரத்தின் அடித்தளத்தை வலுப்படுத்த எதிர்பார்க்கிறோம் என்றார். .

# பென்சில்கள் தொடர்பில் எச்சரிக்கை

பென்சில் மற்றும் வர்ண பூச்சுகளைத் தயாரிப்பதற்காக வெவ்வேறு இரசாயனங்களும் உலோகங்களும் பயன்படுத்தப்படுகின்றன என கொழும்பு சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் வைத்தியர் மஹிந்த விக்ரமாராச்சி தெரிவித்துள்ளார்.

அவற்றைக் கொள்வனவு செய்யும் போது இந்த விடயம் தொடர்பில் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த இலங்கை அதிபர்கள் சங்கத்தின் செயலாளர் பிரியந்த பெர்னாண்டோ, தரமற்ற வர்ண பூச்சுகள் தொடர்பில் பெற்றோர்கள் கவனத்துடன் செயற்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

# "பொருத்தமான வீடு தருவோம் போங்கள்"

"வரி செலுத்துவோரின் பணத்தை செலவழித்து ஒரு மாளிகையில் வாழ்வது நியாயமற்றது. ஜனாதிபதியும் அமைச்சர்களும் மாறும் பட்சத்தில் அவர்களால் ஏன் மாற முடியாது? அவர்களுக்கு போக வேறு வசிப்பிடம் இல்லை என்றால், அவர்களுக்கு வாழ பொருத்தமான வீட்டை நாங்கள் வழங்குவோம், அவர்கள் வசிக்கும் மாளிகை மிகப் பெரியது, "என்று ஜனாதிபதி கூறினார்.

"நாங்கள் அவர்களை வெளியேறச் சொன்னால், அவர்கள் அதை அரசியல் துன்புறுத்தல் என்று சொல்கிறார்கள். நாங்கள் யாரையும் துன்புறுத்தவில்லை. நாட்டை புதிய திசையில் கொண்டு செல்கிறோம். அவர்களை வெளியேறச் சொல்வதற்கு முன், அவர்கள் வெளியேற வேண்டும். அவர்களிடம் நாம் கேட்பது மாற்றத்தை தான். வரி செலுத்துவோரின் பணத்தை செலவழிப்பதற்கு முன், நாம் இரண்டு முறை யோசிக்க வேண்டும், "என்று அவர் மேலும் கூறினார்.

# "ஏப்ரலில் குட்டித் தேர்தல்"

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இவ்வருடம் ஏப்ரலில் நடத்த அரசாங்கம் எதிர்பார்ப்பதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் மாதம் இரண்டாவது அல்லது நான்காவது வாரத்தில் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உரையாற்றிய அமைச்சர், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் சட்டத்தில் திருத்தச் சட்டமூலத்தை அனைத்துக் கட்சிகளும் இணைந்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தல் (திருத்தச்) சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனை மனு மீதான விசாரணை உயர் நீதிமன்றத்தில் நிறைவடைந்துள்ளது.

இதுவரை பகிரங்கமாக வெளியிடப்படாத இந்த உத்தரவு பாராளுமன்ற சபாநாயகருக்கு நேரடியாகத் தெரிவிக்கப்படும் என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

2018 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறவில்லை. 2022ஆம் ஆண்டு நடைபெற இருந்த தேர்தல் பொருளாதார நெருக்கடி காரணமாக 2023 ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டது, நீதிமன்றத் தீர்ப்புகளால் தேர்தல் மேலும் ஒத்திவைக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல்களில் அண்மையில் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் இந்த வருடம் ஏப்ரல் மாதத்திற்கு முன்னதாக நடத்தப்படும் என ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

# "சுதந்திர தினத்தன்று...

இறுதி யுத்த காலப்பகுதியில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள் சங்க உறுப்பினர்கள் யாழ் ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பொன்றை திங்கட்கிழமை (27) நடத்தினர்.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்க இணைப்பாளர் மனுவல் உதயச்சந்திரா இவ்வாறு தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி வேண்டி, அதற்கு சர்வதேச நாடுகள் தலையிட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பல வருடங்களாக உறவுகள் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

ஆனால், இதுவரை எதுவிதமான தீர்வுகளும் கிடைக்கப் பெறவில்லை.

சுமார் 18 ஆயிரத்துக்கும் அதிகமான உறவுகள் காணாமலாக்கப்படுள்ளனர்.

இது தொடர்பில் பல்வேறு வகையில் வடக்கு கிழக்கு எங்கும் எமது சங்கம் போராட்டங்களை முன்னெடுத்து எமது வலிகளை வெளிப்படுத்தியிருந்தது.

இதேநேரம் இக்காலப் பகுதியில் நீதி வேண்டி போராட்டத்தை முன்னெடுத்த உறவுகளின் அன்னையர்கள் 300 இற்கும் அதிகமானோர் இறந்துவிட்டனர்.

ஆனால், தீர்வு தருகின்றோம் என்று கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் தமது இயல்பான போக்கையே தொடர்ந்தும் முன்னெடுக்கின்றன. ஆனால் எமது மக்களுக்கு எதுவித தீர்வுகளோ நன்மைகளும் கிடைக்கவில்லை.

நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது.

ஆனால், எமது மக்களுக்கு இன்னமும் அதன் பலன்கள் கிடைக்கவில்லை.

இவ்வாறான பின்னணியில் இலங்கையின் 77 ஆவது சுதந்திர நாளை கரி நாளாக அனுஷ்டிக்க அழைப்பு விடுக்கின்றோம்.

இந்த எதிர்ப்பு தினத்தை வடக்கில் கிளிநொச்சியிலும் கிழக்கில் மட்டக்களப்பிலும் முன்னெடுக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

எமது இந்த போராட்டத்துக்கு பல்கலைக்கழகம், அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், வர்த்தக சங்கங்கள், பொது போக்குவரத்து மற்றும் அனைத்து தரப்பினரும் ஆதரவளிக்குமாறு அழைப்பு விடுக்கின்றோம் என்றும் தெரிவித்து கொள்கிறோம்.

இதேவேளை மாற்றங்கள் நிகழும் என்று கூறி மாறி மாறி வந்த அரசாங்கங்களினால் வேதனைகளை தவிர வேறெதுவும் இதுவரை தமிழ் மக்களுக்கு கிடைக்கப்பெறவில்லை.

மாறாக சிங்கள குடியேற்றங்களுக்கான முஸ்தீபுகள் திரைமறைவில் முன்னெடுத்து வருகின்றது என வடக்கு கிழக்கு பெண்கள் வலையமைப்பு தலைவி ஜெயானந்தன் ஜெயச்சித்ரா குற்றம் சாட்டியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் -

இலங்கை சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து இன்று வரை அடக்கு முறைகளும், அடாவடிகளுமே எமது இனத்திற்கு எதிராக நடந்தேறுகின்றன,

அதைவிட தமது இனப் பரம்பலை வட கிழக்கிலும் வலுவாக்க கடந்த அரசுகளை விட இந்த அரசு முனைப்புடன் செயற்படுகின்றது.

இதற்காக மகாவலி விரிவாக்கல் என்ற குறியீட்டுடன் சிங்களவர்களை குடியமர்த்த மும்முரமாக செயற்படுகின்றது. இதை ஏற்க முடியாது.

அதுமட்டுமல்லாது இந்த அனுர அரசும் சிறைகளில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று கூறியுள்ளது.

அனுர அரசின் இந்த செயற்பாடானது கடந்த கால அரசின் கொள்கையை முன்னெடுப்பதாக இருக்கிறது.

அந்த வகையில் அனுர அரசாங்கமும் தமிழ் மக்களை ஏமாற்றி உள்ளது. எனவே, அனுர அரசின் இத்தகைய போக்கை கண்டித்து வரும் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள சுதந்திர தினத்தை கரி நாளாக கடைப்பிடிப்பதற்கு அனைவரும் ஒன்று திரள வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# "எங்களைப் பழிவாங்க வேண்டாம்"

யோஷித ராஜபக்ஷவிற்கு பிணை வழங்கப்பட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

"அரசியல் வேட்டை நடக்கும்போது, நாங்கள் உதவிக்காக நீதிமன்றத்தையே நம்புகிறோம், நான் பாராளுமன்றத்தில் குரல் எழுப்புகிறேன், ஆனால் அதேவேளை என் சகோதரர் சிறையில் அடைக்கப்படுகிறார்" என்று அவர் கூறினார்.எமக்கு எதிராக சட்டங்களை அமுல்படுத்துவது சட்டவிரோதமானது அல்ல, ஆனால் யோஷிதவை கைது செய்வதற்காக அதிவேக நெடுஞ்சாலை ஊடாக பெலியத்தவிற்கு வந்தது நியாயமற்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். "யோஷித ராஜபக்ஷவுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவது பிரச்சினையல்ல, ஆனால் அதிவேக நெடுஞ்சாலையை பயன்படுத்தி அவரை கைது செய்த விதம் தவறு. அவர்கள் எமக்கு அறிவித்திருந்தால் திங்கள் அல்லது ஞாயிற்றுக்கிழமை நாங்கள் ஆஜராகியிருப்போம்" என்றார்.

உரிய நடைமுறைகளை அரசாங்கம் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தினார்.

"ஊடகக் காட்சிகளில் ஈடுபட்டு பொதுப் பணத்தை வீணடிப்பதை விடுத்து, நாங்கள் ஏதேனும் தவறு செய்திருந்தால் நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்று நிரூபிக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கிறோம். அரசியல் இலாபங்களுக்காக எங்களைப் பழிவாங்க வேண்டாம்" என நாமல் ராஜபக்ஷ எம்.பி தெரிவித்துள்ளார்.

# யோஷிதவுக்கு பிணை

பெலியத்த பகுதியில் குற்றப்புலனாய்வு (சிஐடி) அதிகாரிகளால் ஜனவரி 25 ஆம் தழதி, யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு, மேலதிக நீதவான் பவித்ரா சஞ்சீவனி முன் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் ஜனவரி 27ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது, தலா 50 மில்லியன் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

# மற்றுமொருவரின் பட்டமும் நீக்கம்

எனினும் அபேரத்னவின் பெயருக்கு முன்பு பேராசிரியர் என்ற பட்டம் குறிப்பிடப்பட்டிருந்தது, அந்தப் பட்டம் அமைச்சின் வலைத்தளத்திலும் காட்டப்பட்டு இருந்ததாகவும் அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

அபேரத்ன பேராசிரியர் பதவியை வகித்தாலும், தற்போது அவர் ஒரு பல்கலைக்கழகத்தில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளாததால், பேராசிரியர் பட்டம் பயன்படுத்தப்பட முடியாது என்றும், தனது பெயருக்கு முன்பாக டாக்டர் பட்டம் மட்டுமே பயன்படுத்தப்படும் என்றும் அபேரத்ன அறிவித்துள்ளதாக அறியமுடிகின்றது.

# அரிசியை பதுக்கிய 9 பேர் சிக்கினர்

எம். எஸ். எம். நூர்தீன்

காத்தான்குடியில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரிகளினால் ஞாயிற்றுக்கிழமை (26) பல சரக்கு விற்பனை நிலையங்கள் மற்றும் அரிசி விற்பனை நிலையங்கள் சோதனையிடப்பட்டுள்ளதுடன் இதன்போது 9 வர்த்தகர்களுக்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பதிகாரி என்.எம்.சப்றாஸ் தெரிவித்தார்

இதில் அரிசிகளை பதுக்கி வைத்து மற்றும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசிகளை விற்பனை செய்தவர்கள் அரிசியை பதுக்கி வைத்துக் கொண்டு விற்பனைக்கு மறுத்தவர்கள் போன்றவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த 9 பேரையும் எதிர் வரும் 30ம் திகதி மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராக பணித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறான சுற்றி வளைப்பு நடவடிக்கைகளை மாவட்டத்தில் அனைத்து இடங்களிலும் மேற்கொள்ளப்படும் எனவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார பையின் மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பதிகாரி என்.எம்.சப்றாஸ் தெரிவித்தார்



## நியமனக் கடிதங்கள் வழங்கல்



ஏ.எம்.ஜலீல்

மாத்தளை மாவட்டத்தில் எலமல்பொத்த ஜும்ஆ மஸ்ஜித் உட்பட மூன்று தக்கியாக்கள், நிக்ககொல்ல ரஹீமியா மஸ்ஜித் , உக்குவளை பரகஹவெல ஆயிஷா மஸ்ஜித் ஆகியனவற்றுக்கான தெரிவான நிர்வாகிகளுக்கான நியமனக் கடிதங்களும் கல்லோயா தக்கியாவுக்கான பதிவு சான்றும் வழங்கப்பட்டுள்ளன.

மாத்தளை மாவட்ட முஸ்லிம் கலாசார அபிவிருத்தி அதிகாரி எம்.ஜிப்ரியின் கோரிக்கையின் பிரகாரம், மாத்தளை மேலதிக செயலாளர் திருமதி ரிஸ்லாவினால் இவை அவரது காரியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டது. இதன்போது மாத்தளை மாவட்ட மஸ்ஜிதுகள் சம்மேளனத் தலைவர் தேசபந்து அல்ஹாஜ் முஹ்தார் அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட நிர்வாகிகளும் கலந்துகொண்டனர்

## சாந்திபுரத்தில் வீடு தீக்கிரை

எஸ்.ஆர்.லெம்பேட்



மன்னார் சாந்திபுரம் பகுதியில் திங்கட்கிழமை (27) காலை குடிசை வீடு ஒன்றில் ஏற்பட்ட தீ பரவல் காரணமாக வீடு முற்றாக எரிந்து தீக்கிரையாகியது.

திடீரென தீ பரவல் ஏற்பட்ட நிலையில் இதனை அவதானித்த மக்கள் விரைவாக செய்யப்பட்டதன் அடிப்படையில் தீப்பரவல் அருகில் உள்ள வீடுகளுக்கு பரவ முன்னதாக அணைக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் மன்னார் மின்சார சபை, மன்னார் நகர சபையின் தீயணைப்பு வாகனம் உடனடியாக சம்பவ இடத்திற்கு வருகை தந்ததுடன் தீ முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

குறித்த தீ பரவல் காரணமாக வீட்டில் காணப்பட்ட உடமைகள் அனைத்தும் தீயில் எரிந்து நாசமாகியது. என்பதுடன் மக்கள் ஒண்றினைத்து செய்யப்பட்டதன் அடிப்படையில் பெரும் தீ விபத்து தவிர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வட்டவளை விபத்தில் மேலுமிருவர் காயம்



ஹட்டனில் இருந்து வட்டவளை மவுண்ட்ஜின் தோட்டத்திற்கு பயணித்த முச்சக்கர வண்டி ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 30 அடி பள்ளத்தில் திங்கட்கிழமை (27) அதிகாலை விழுந்து விபத்துக்கு உள்ளானது. அதில், முச்சக்கர வண்டியின் சாரதியும் பயணி ஒருவரும் படுகாயமடைந்து வட்டவளை பிராந்திய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அதன்பின்னர் அவ்விருவரும் லதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன்- கொழும்பு பிரதான சாலையில், வட்டவளை குயில்வத்த பெட்ரோல் நிரப்பு நிலையத்திற்கு அருகில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து குறித்து விசாரணை நடத்தி வரும் வட்டவளை பொலிஸார் , அதிவேகத்தில் இயக்கப்பட்ட முச்சக்கர வண்டி வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் கவிழ்ந்ததாக கண்டறியப்பட்டுள்ளது.

## காதல் விவகாரம்: தாத்தை தாக்கியதில் ஒருவர் பலி

உமா மகேஸ்வரி

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள ஓபநாயக்க பொலிஸ் பிரிவிலுள்ள ஹூனுவலை தோட்டத்தில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்

ஞாயிற்றுக்கிழமை (26) இடம் பெற்ற இச்சம்பவத்தில் 03 பிள்ளைகளின் தந்தையான ஜோசப் இராஜேந்திர குமார் என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவ தினம் பிரதேசத்திலுள்ள இவ்விரு இனங்களைச் சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்து அப்பகுதி கிராம சேவையாளர்ரின் தலைமையில் இப்பகுதியில் உள்ள பிரதான வீதியொன்றை "தூய்மையான இலங்கை" வேலைத்திட்டத்தின் கீழ் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது

சுமார் 100 பேர் கலந்து கொண்ட இச்சிரமதானத்தில் பெரும்பான்மை இன பெண் ஒருவரை காதலித்த தோட்ட தமிழ் இளைஞர் ஒருவரின் தந்தையும் அந்த பெண்ணின் தாத்தாவும் கலந்து கொண்டுள்ளனர் .

இவர்களிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியது. இதன் போது பெண்ணின் தாத்தா சிரமதான பணிக்கு கொண்டு வந்த மண் வெட்டியால் தலையில் தாக்கியதில் தமிழ் இளைஞனின் தந்தை தலையில் பலத்த காயம் மேற்பட்டு ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.இந்த காதலுக்கு இரு வீட்டாரின் பெற்றோர்கள் விருப்பம் தெரிவித்த போதிலும் பெண்ணின் தாத்தா மட்டுமே நீண்ட காலமாக எதிர்ப்பு தெரிவித்து வந்துள்ளார்பிரேத பரிசோதனைக்காக பிரேதம் காவத்தை பொது வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ள நிலையில் சந்தேக நபரை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்இது இவ்வாறிருக்க திருமணம் முடிக்காமல் இந்த

காதல் ஜோடி, காதலன் வீட்டில் பல மாதங்களாக தங்கி இருப்பதாகும் பெண்ணின் தாத்தா இது குறித்து வினவிய போதே இந்த இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

## மின் தூணில் மோதிய வான்



கனகராசா சரவணன்

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பிள்ளையாரடி சர்வோதய வீதியில் வீதியை விட்டு விலகிய வான் மின்சார தூணுடன் மோதி விபத்துக்கு உள்ளானதில் மின்சார தூண் உடைந்து வீழ்ந்ததுடன் வான் பலத்த சேதமடைந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (26) இரவு இடம்பெற்றுள்ளதுடன் சாரதியை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தை அடுத்து, அந்தப் பகுதியில் சிறிது நேரம் மின்சாரம் தடைபட்டது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை கொக்குவில் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மீட்பு; இருவர் கைது

எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹைறாத் வீதியில் சனிக்கிழமை (25) அன்று திருடப்பட்ட பல்சர் மோட்டார் சைக்கிள் திங்கட்கிழமை (27) அன்று அம்பாறை பகுதியில் வைத்து மீட்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளை பட்டப்பகலில் இருவர் திருடிச் செல்லும் காட்சி சி.சி. ரி.வி கேமராவில் பதிவாகி இருந்த நிலையில், வாழைச்சேனை பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கமைய பொலிஸார் மேற்கொண்ட சோதனையின் போது மோட்டார் சைக்கிளை அம்பாறை பஸ் தரிப்பு நிலையப் பகுதியில் வைத்து மீட்டுள்ளனர்.

அத்துடன், மோட்டார் சைக்கிளை திருடிய இருவரையும் கைது செய்துள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## புதையல் தோண்டிய தேரர் உட்பட மூவர் கைது

தீகவாபி வெஹரகல பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் சட்டவிரோதமாக புதையல் அகழ்வதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது தேரர் ஒருவர் உட்பட மூன்று பேர் எரகம பொலிஸாரால் ஞாயிற்றுக்கிழமை (26) கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட தேரர் தெஹியோவிட்ட பகுதியில் உள்ள விகாரை ஒன்றில் வசித்து வருபவர் எனவும் ஏனைய சந்தேக நபர்கள் குருவிட்ட பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

மேலும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எரகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வட்டவளை விபத்தில் வெளிநாட்டவர்கள் இருவர் கைது

ரஞ்சித் ராஜபக்ஷ

இரண்டு வெளிநாட்டினரை ஏற்றிச் சென்ற முச்சக்கர வண்டி ஒரு பள்ளத்தாக்கில் விழுகிறது, இரண்டு வெளிநாட்டினரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறார்கள்.

கொழும்பிலிருந்து நுவரெலியா நோக்கி பயணித்த முச்சக்கர வண்டியில் பயணித்த இரண்டு ஸ்லோவெக்கியா நாட்டவர்கள் காயமடைந்து வட்டவளை பிராந்திய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து ஹட்டன்- கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை குயில்வத்த பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (26) பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.



## ஆயிஷாவில் பாராட்டு நிகழ்வு



வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தின் பாராட்டு நிகழ்வு பாடசாலை அதிபர் என்.சஹாப்தீனின் நெறிப்படுத்தலில், நூலகப் பொறுப்பாசிரியர் எம்.ஐ.சபீக் தலைமையில் சனிக்கிழமை (25) இடம்பெற்றது.

இதன் போது, வாசிப்பு மாத போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்ற மாணவிகள் மற்றும் இறுதித் தவணைப் பரீட்சையில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்ட மாணவிகளை பாராட்டி சான்றிதழ்கள் மற்றும் நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.எம். தாஹிர் கலந்து கொண்டதுடன், சிறப்புப் பேச்சாளராக ஓய்வுபெற்ற அதிபர் எச். எம்.எம்.இஸ்மாயில் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

எச்.எம்.எம்.பர்ஸான்

## பயிற்சிநெறி திட்டம் ஆரம்பம்



இன்றைய உலகில் அதிகமான குற்றச் செயல்கள் இடம்பெற்று குற்றவாளிகளும் அதிகரித்து வருகின்றனர் .இத்தகைய குற்றவாளிகளை புனர்வாழ்வளித்து அவர்களைச் சமுதாயத்தோடு இணைக்கின்ற மிக முக்கியமான பணியை யாழ்ப்பாண சிறைச்சாலை வழங்குகின்றது.

இங்கே சுமார் எழுநூற்றிற்கும் அதிகமான கைதிகள் புனர்வாழ்வளிக்கப்படுகின்றனர். அதிகளவான கைதிகள் போதைப் பொருளுக்கு அடிமையாகி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கு தொழிற் திறன்களும் தொழிலும் இல்லாது இருப்பது காரணமாக அமைகின்றமை ஆய்வுகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது. அந்த வகையில் கைதிகளுக்கான தொழில் திறனை வழங்கி தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து மீண்டும் அவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடாது நற்பிரஜைகளாக சமூகத்தில் இணைக்கும் நோக்கில் INTERNATIONAL MEDICAL HEALTH ORGANIZATION (IMHO) USA, RATNAM FOUNDATION,UK, இணைந்து இவ்வாறான திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்

கைதிகளை புனர்வாழ்வளித்து குறிப்பாகப் கைதிகளுக்கான மறுவாழ்வுச் சிகிச்சைத் திட்டம் ஒன்றை IMHO USA, RATNAM FOUNDATION UK, இணைந்து கடந்த வெள்ளிக்கிழமை (24) அன்று யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர். இது கைதிகளுக்கான கணினிப் பயிற்சி நெறி ஆகும். இந் நிகழ்வின் பிரதம அதீதியாக அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் பொருளாளர் முரளி இராமலிங்கம் நிகழ்வினை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

நிகழ்விற்கு சிறைச்சாலை அத்தியட்சகர் இந்திர குமார் NAITA முகாமையாளர் முருகன் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## வருடாந்த பொதுக்கூட்டம்



புத்தளம் கால்பந்தாட்ட மத்தியத்தஸ்த்தர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கின் கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை (24) இடம்பெற்றது.

மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவர் எம்.ஏ.எம். பஸ்ரின் தலைமையில் நடைபெற்ற இந்த வருடாந்த பொதுக்கூட்டத்தில் மத்தியஸ்தர் சங்கத்தின் அனைத்து அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

புத்தளம் கால்பந்தாட்ட லீக் உயர் பீட உறுப்பினரும், சிரேஷ்ட கால்பந்தாட்ட நடுவரும், உடற்கல்வி போதனாசிரியருமான கலாநிதி எஸ்.ஆர்.எம்.ஆஸாத் இந்நிகழ்வினை நெறிப்படுத்தினார்.

எதிர்காலத்தில் மத்தியஸ்தர் சங்கத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகவும் இங்கு விரிவாக ஆராயப்பட்டதுடன் பின்னர் பழைய நிர்வாகம் கலைக்கப்பட்டு புதிய நிர்வாகக் குழுவினர் தேர்வு செய்யப்பட்டார்கள்.

தலைவராக மீண்டும் எம்.ஏ.எம். பஸ்ரினும், செயலாளராக புத்தளம் கால்பந்தாட்ட லீக் உயர்பீட உறுப்பினரும், சுற்றுப்போட்டி இணைப்பாளரும், போட்டி ஆணையாளருமான எம்.ஜெனூசனும், பொருளாளராக எம்.அம்ஜத்தும், உப தலைவராக எம்.ஓ.எம்.ஜாக்கிரும், உதவி செயலாளராக ஏ.ஏ.எம்.கியாஸும், நிர்வாக உறுப்பினர்களாக லீக் உயர் பீட உறுப்பினர் எஸ்.எம்.ஜிப்ரி மற்றும் எம். ஜே.எம்.அஷ்ரப்தீன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

எம்.யூ.எம்.சனூன்

## அலுவலகம் திறந்து வைப்பு



வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அலுவலகம், திங்கட்கிழமை (27) அன்று பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா மன்னார் வீதியில் வவுனியா தெற்கு பிரதேச செயலக வளாகத்தில் அமைந்துள்ள கட்டிடத்திலேயே குறித்த ஒருங்கிணைப்பு குழு அலுவலகம் திறந்து வைக்கப்பட்டதுடன் பாராளுமன்ற நாட்கள் தவிர்ந்த தினங்களில் மக்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றும் வகையில் இவ் அலுவலகத்தில் ஒழுங்கமைக்கப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான ம. ஜெகதீஸ்வரன், திலகநாதன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

க. அகரன்

## கற்றல் உபகரணம் வழங்கிவைப்பு



மட்டக்களப்பில் வர்த்தகரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி உறுப்பினருமான அழகையா தேவகுமார் தனது சொந்த நிதியில் வந்தாறுமூலை மாவடிவேம்பு பிரதேசத்தில் உள்ள வறிய குடும்பங்களைச் சேர்ந்த 100 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை ஞாயிற்றுக்கிழமை (26) அன்று வழங்கி வைத்துள்ளார்.

கனகராசா சரவணன்

## தேயிலை ஆராய்ச்சி நிலையத்திற்கு விஜயம்



பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் இரத்தினபுரி மாவட்டத்தில் கரபிஞ்ச, புனித ஜோகிம் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தை (T R I ) பார்வையிட்ட தோடு அங்கு நிலவுகின்ற குறை நிறைகளை நேரடியாக கேட்டறிந்துள்ளார்.

அவற்றுக்கான தீர்வை பெற்றுக் கொடுப்பதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்ததோடு இயந்திர சாதனங்களையும் பார்வையிட்ட அமைச்சர், எதிர்காலத்தில் புதிய தொழில்நுட்பங்கள் மூலம் உலக போட்டி சந்தையிலே இலங்கையின் தேயிலை அதிகம் விரும்பத்தக்க நிலையை கொண்டு செல்ல முடியும் எனவும் இலங்கை மொத்த தேசிய உற்பத்தியில் தேயிலை உற்பத்தியில் ஒரு தன்னிறைவு அடைய வேண்டுமானால் தாங்கள் புதிய வழிமுறைகளை மேற்கொள்வதன் மூலமே தேயிலை உற்பத்தியின் ஒரு நிலையான அன்னிய செலாவணியை ஈட்டிக் கொள்ள முடியும் என கலந்து கொண்டிருந்த அதிகாரிகளு க்கு சுட்டிக்காட்டியிருந்தார்.

எஸ். சதீஸ்


## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8 (1) பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கீழ் காணும் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

**கம்பனியின் பழைய பெயர்:** டீ லீப் விஷன் (கரண்டி) லிமிட்டட்
**கம்பனியின் இலக்கம்:** (ஜிஎல் 2425)
**பதிவு செய்யப்பட்ட முகவரி:** இல.02, டீல் பிளேஷ், கொழும்பு 03
**கம்பனியின் புதிய பெயர்:** டீ லீஃப் ட்ரஸ்ட் (கரண்டி) லிமிட்டட்
**மாற்றம் நிகழ்ந்த திகதி:** 2024 டிசம்பர் மாதம் 02 ஆம் திகதி

**ஜனசக்தி கோர்பரேட் சேர்விசஸ் லிமிடெட்**
**செயலாளர்கள்**

# எதிர்பார்ப்புகள் நிறைந்த 2025 பாதீடு

அநுர தலைமையிலான அரசாங்கத்தின் 2025 பாதீடு, நாட்டின் மக்கள் மத்தியில் பல எதிர்பார்ப்புகளை கொண்ட முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைந்துள்ளது. ஆட்சி பீடமேறியபோது காணப்பட்ட வரவேற்பு, அரசாங்கத்தின் மக்களுக்கு முக்கியத்துவமளிக்கும் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்காமையின் காரணமாக படிப்படியாக குறைவடைந்து வரும் நிலையில், அதன் தாக்கங்களை கிராமிய மட்டங்களில் கூட்டுறவு சங்க தேர்தல்களில் பிரதிபலிக்கப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

க்ளீன் ஸ்ரீ லங்கா, முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகள் நீக்கம், குற்றவாளிகளை கண்டறிவது, வாகன இறக்குமதி மீள அனுமதி போன்ற மக்களின் வாழ்க்கையுடன் நேரடி தொடர்புடைய விடயங்களில் தாக்கம் செலுத்தாத விடயங்களில் அரசாங்கம் அதிகம் கவனம் செலுத்துகின்றது போன்ற தோற்றப்பாடு பிரதான ஊடகங்களில் வழங்கப்படுவதுடன், பிரதான பிரச்சனைகளாக அமைந்துள்ள வாழ்க்கைச் செலவு குறைப்பு, அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைப்பது, வரிச் சுமைகளை குறைப்பது, எரிபொருள் விலை குறைப்பு போன்ற விடயங்களில் இந்த அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படாமல் உள்ளன.

இந்நிலையில் அரச சம்பளம் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கப்படும் என ஜனாதிபதி அண்மையில் இரு வேறு சந்தர்ப்பங்களில் மக்கள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்திருந்தார். அதுபோன்று உழைக்கும் போது செலுத்தும் வரி இதுவரை காலமும் 100,000 ரூபாய் மாத வருமானத்தின் மீது அறவிடப்படும் நிலையில், அந்த எல்லையை 150,000 ரூபாயாக உயர்த்தும் பரிந்துரையும் 2025 பாதீட்டில் உள்ளடக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், வங்கிகளில் காணப்படும் வைப்புகளின் மீது கிடைக்கும் வட்டியில் அறவிடப்படும் தக்க வைத்துக் கொள்ளும் வரி வீதம் 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக அதிகரிக்கும் தீர்மானமும் இந்த பாதீட்டில் உள்ளடக்கப்படும் என கருதப்படுகின்றது.

அதற்கு மேலதிகமாக புதிதாக சில வரிகளும் அறிமுகம் செய்யப்படவுள்ளன. குறிப்பாக டிஜிட்டல் சேவைகளின் மீது பெறுமதி சேர் வரி அறவிடுவது, ஏற்றுமதி செய்யப்படும் சேவைகளுக்கு பெறுமதி சேர் வரியாக 15சதவீதம் அறவிடுவது போன்றன இதில் அடங்கியிருக்கும்.

வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படவுள்ள நிலையில், அதன் விலைகளை உயர்ந்தமட்டத்தில் பேணுவதற்காக வரிகளை உயர்ந்த நிலையில் பேணும் தீர்மானமும் மேற்கொள்ளப்படும்.

வழமையாக பாதீட்டில் உயர்த்தப்படும் மதுபானங்கள் மற்றும் சிகரட் வகைகள் மீதான வரி ஏற்கனவே அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் அவற்றின் மீதான வரி விதிப்புகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் குறைவாக காணப்படுவதாக எதிர்பார்க்கப்படுகின்றது.

எரிபொருட்களை இந்த அரசாங்கம் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அவற்றின் மீது காணப்படும் வரிகளை குறைப்பது தொடர்பிலும், மருந்துப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் அடங்கலான அத்தியாவசிய பொருட்கள் மீது காணப்படும் வரிகளை நீக்குவது அல்லது குறைப்பது தொடர்பிலும் இந்த பாதீட்டில் அரசாங்கம் கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்



குடும்ப உறுப்பினர்களிடையே பொய்களை தாராளமாக உபயோகித்தால், அந்தக் குடும்பத்தில் நிம்மதி கிட்டாது. எதையும் ஒளித்து மறைப்பது, வெளிப்படைத் தன்மை இன்றிப் பழகினால், அவர்களிடம் உண்மைத் தன்மையே அற்றுப் போய்விடும்.

ஒருவரை ஒருவர் நம்பாமல் நடந்தால், அவர்களிடம் கோபதாபம் தானாகவே வந்துவிடும். குடும்பத்தில் எல்லா உறுப்பினர்களும் மனம்விட்டுப் பேச வேண்டும். இதனால் குடும்ப உறவு மேலோங்கும்.

குடும்ப உறவு ஒரு பரம்பரையுடன் முடிவதில்லை. எதிர்காலத்துடன் வளர்ந்து செழிக்க வேண்டிய பந்தங்கள். குடும்ப உறவுகளை சிதைக்கக் கூடாது. வீட்டில் உள்ள பிள்ளைகளுடன் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். பொய்களைப் பேசி அவர்களை ஏமாற்ற லாகாது.

கல்வி கற்றலில் மட்டுமல்ல; ஒழுக்க நெறி, பக்தி மார்க்கம், பெரியவர்களை மதித்து நடத்தல் என்பவை இளமைப் பராயத்திலேயே ஊட்டப்பட வேண்டும்.

குடும்பங்கள் எல்லாம் இணைந்ததே, இந்தப் பரந்த உலகம். தனித்து வாழ்வது அல்ல; பொறுப்பு, நம்பிக்கையுடன் வாழ்க்கையை அமைத்தால், அது போல் இன்பம் வேறேது?.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

முஸ்லிம்கள் எடுத்த முடிவு

# சமூகத்திற்கு பயன் தருமா?

மொஹமட் பாதுஷா

முஸ்லிம்களின் அரசியல் சார்புநிலை மாறி வருவதான ஒரு தோற்றப்பாடு அண்மைக்காலமாக ஏற்பட்டிருக்கின்றுது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர்தான் இது வெகுவாக உணரப்படுகின்றது. இதில் சாதகங்கள் இருக்கின்றது என்றாலும், நீண்டகால அடிப்படையில் நோக்கினால் இதனால் பாதகமான விளைவுகளையே முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ள நேரிடுமோ என்ற ஐயப்பாடும் ஏற்படுகின்றது.

கடந்த காலத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகள் குறிப்பாக கட்சித் தலைவர்களும் அமைச்சர்கள் மற்றும் எம்.பி.க்களாக பதவி வகித்தவர்களும் முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷையை சரிவர முன்கொண்டு செல்லவில்லை. சமூகத்திற்காக தமது பதவி, நலன்களை மீறி குரல்கொடுக்கவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு இருந்தது. இது உண்மையானதே.

இதன் காரணமாக இவர்களில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும், அல்லாத பட்சத்தில் இவர்களையே மாற்றிவிட வேண்டும் என்ற சிந்தளையும் மேலோங்கியிருந்தது. இதனது உண்மையான அர்த்தம. குறிப்பிட்ட் கட்சியின் ஊடாக ஒப்பீட்டளவில் சிறந்தவர்களை தெரிவு செய்ய வேண்டும் என்பதாகும்.

ஆனால், ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வேறு விதமான முடிவுகளை மக்கள் எடுத்திருந்தனர். மொத்த தேர்தல் முடிவுகளுக்கு ஒத்திசைவாக, 8 முஸ்லிம் எம்.பி.க்கள் என்.பி.பி. கட்சியில் தெரிவானார்கள். முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மக்கள் காங்கிரஸ் சார்பில் மொத்தமாக 7 பேர் எம்.பி.யானார்கள். தேசிய காங்கிரஸ் தனது பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழந்தது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதான களமாகக் கொண்டு முஸ்லிம் கட்சிகளின் ஊடாக பிரதிநிதித்துவ அரசியலுக்கு வந்தவர்கள் மீது ஆயுரம் விமர்சனங்கள் இருந்தாலும், அவர்கள் பெயருக்காவது முஸ்லிம்களுக்கான பிரத்தியேக அரசியலை தூக்கிப் பிடித்துக் கொண்டு இருந்தனர். முஸ்லிம் கட்சிகளின் எம்.பி.க்கள் என்பதை அவர்கள் ஏதாவது ஒரு புள்ளியில் நிரூபித்துக் காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு இருந்தது.

அதுமட்டுமன்றி கணிசமான முஸ்லிம் எம்.பி.க்கள் முஸ்லிம் கட்சிகளின் ஊடாகவும் தெரிவு செய்யப்பட்டதால் முஸ்லிம்களுக்கான தனித்துவ அடையாள அரசியல் என்ற ஒரு கோட்பாடு ஏதோ ஒரு மூலையில் உயிரோட்டமாக இருக்கின்றது எனலாம்.

இதுதவிர பெரும்பான்மைக் கட்சிகளின் ஊடாக முஜிபுர் ரஹ்மான் போன்ற முஸ்லிம் எம்.பி.க்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். எல்லா முட்டைகளையும் ஒரே மண்சட்டியில் வைக்கக் கூடாது என்ற அறிவுறுத்தலின் பிரகாரம், எல்லாக் கட்சிகளின் ஊடாகவும் முஸ்லிம்கள் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்வதே பாதுகாப்பான ஏற்பாடு என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

ஆனால், இப்போது முஸ்லிம் கட்சிகளைச் சேர்ந்த எந்தவொரு தலைவரும் எம்..பி.யும் ஆளும் தரப்பில் இல்லை. ஆளும் தரப்பு இவர்களுடன் உறவாட முயல்வதாகக் கூடத் தெரியவி;ல்லை. ஆளும் தரப்பில் இருக்கின்ற எந்த முஸ்லிம் எம்.பி.யும் இந்த அமைச்சரவையில் இல்லை. 'அமைச்சராக நியமிக்க அனுபவமும் தகுதியும் போதாது' என்று அரசாங்கம் கூறிக் கொண்டிருக்கின்றது.

இப்படியான ஒரு சூழலில் முஸ்லிம்கள் பல்வேறு விதமான நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கின்றார்கள். இவை இனிமேல்தான் முஸ்லிம் சமூகத்தின் கண்களுக்குப் பலப்படத் தொடங்கும்.

முதலாவது விடயம், வடக்கு, கிழக்கு முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி அதற்கு வெளியில் வாழும் முஸ்லிம் மக்களுக்கும் ஒரு பாதுகாப்பு அரணாக இருந்த பிரத்தியேக அரசியல் சிதைக்கப்பட்டுள்ளது. இதற்கு அந்தந்த கட்சியின் முன்னாள் எம்.பி.க்களே காரணம். அதற்கு மேலதிகமாக மாற்றம் என்ற அலையில் அள்ளுண்டு போனதும் ஒரு காரணமாகும்.

அடுத்த விடயம், தோல்வியுற்ற முஸ்லிம் எம்.பி.க்கள் சமூகம் பற்றிப் பேசுவதை நிறுத்தியிருக்கின்றார்கள். 'நீங்கள் எங்களுக்கு வாக்களிக்கவில்லைதானே, எனவே புதியவர்களுடன் பேசி தீர்த்துக் கொள்ளுங்கள் என்ற தோரணையில் அவர்கள் செயற்படுகின்றனர்.

முஸ்லிம் கட்சிகளில் தெரிவு செய்யப்பட்ட எம்.பி.க்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பௌதீக ரீதியாக அவற்றின் பலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதான தோற்றப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. எனவே 'நீங்கள் என்.பி.பி.க்கு தானே வாக்களித்தீர்கள், அவர்களை குரல் கொடுக்கச் சொல்லுங்கள்' என்று சொல்லாமல் சொல்கின்றார்கள்.

ஆகவே முஸ்லிம்கள் எடுத்த முடிவு பயன்தருமா? என்.பி.பி. உள்ளிட்ட பெரும்பான்மைக் கட்சிகளின் ஊடாக எம்.பி.யாகி உள்ளவர்கள் முஸ்லிம் சமூகத்திற்கான உரிமைகளை, அபிலாஷைகளை நிவைநிறுத்துவார்களா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

தேசிய மக்கள் சக்தியாக அவதாரம் எடுத்துள்ள ஜே.வி.பி.யில் ஒரு தேசியப் பட்டியல் நியமன எம்.பி. உட்பட 8 முஸ்லிம் எம்.பி.க்கள் இருக்கிள்றனர். மொத்தமாக தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் எம்.பி.க்களுடன் ஒப்பிடுகையில் இது அரைவாசிக்கும் குறைவு என்றாலும். ஆளும் தரப்பில் இருப்பது என்பது பலமானது என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

> காலகாலமாக மக்களை ஏமாற்றிய பழைய அரசியல்வாதிகளுக்கு இது ஒரு பாடமாக அமைந்தது என்பதை மறுக்க முடியாது

ஆனால் மாற்றம் என்ற பெயரி;ல் புதுமுக அரசியல்வாதிகள்தான் அதிகளவில் இம்முறை பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். குறிப்பாக என்.பி.பி.யின் முஸ்லிம் எம்.பிக்கள் எல்லோரும் புதியவர்கள். அதாவது எம்.பி. பதவி என்பது அவர்களுக்கு என்.பி.பி. கொடுத்திருக்கின்ற வரம் என்றே கூறலாம்.

புதுமுகங்கள், மிக முக்கியமாக ஆளும் தரப்பில் உள்ளவர்கள் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைக்காக குரல் கொடுக்க வேண்டிய தார்மீக கடமைப்பாட்டைக் கொண்டிருக்கின்றார்கள். இலங்கையர் என்ற பொதுமைப்படுத்தலின் கீழ் அல்லது கட்சியின் கொள்கைக்கு உட்பட்டு சமூக விடயத்தில் வாய்மூடி மௌனமாக இருப்பது அரசியலில் தார்மீகமானதாக அமையமாட்டாது.

இங்கே இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று, முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள் பற்றிய விடய அறிவும் பின்புலமும். இரண்டாவது, என்.பி.பி.யின் எழுதப்படாத விதிகளும் கட்டுக்கோப்பான தன்மையும்.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் நூற்றாண்டுகள் பழமை வாய்ந்தது. பல பிரச்சினைகள் ஐம்பது அறுபது வருட வரலாற்றைக் கொண்வை. எனவே இதனை புதுமுக எம்.பி.க்கள் அறிவார்களா? என்பதை முஸ்லிம் சமூகம் மீளாய்வு செய்ய வேண்டும்.

என்.பி.பி. உள்ளடங்கலாக ஏனைய கட்சிகள் ஊடாக எம்.பி.யாக வந்துள்ள முஸ்லிம்களில் பலர் அரசியலுக்கு புதியவர்கள். ஆகவே நாட்பட்ட முஸ்லிம்களின் காணிப் பிரச்சினையை, வடக்கு, கிழ்கில் முஸ்லிம்கள் எதிர்கொண்ட அடக்குமுறையை, தமிழ் ஆயுதக்குழுக்கள் மேற்கொண்ட அட்டூழியங்களை, விகிதாசார ஒதுக்கீட்டில் காட்டப்படும் பாரபட்சத்தை அவர்கள் ஆழமாக அறிந்திருக்க வாய்ப்பில்லை.

இந்த விவகாரங்களை நன்றாக அறிந்திருந்த முஸ்லிம் கட்சிகளின் எம்.பிக்களே முப்பது வருடங்கள் அவற்றுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்க போராடாமல் விட்டுப்போன பிறகு, என்.பி.பி.யின் முஸ்லிம் எம்.பிக்கள் அல்லது பொதுவாக புதிததாக பாராளுமன்றத்திற்கும் வந்துள்ள முஸ்லிம்கள் குரல் கொடுப்பார்கள் என்று எந்த அடிப்படையில் நம்புவது?

அமைச்சராக முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்படாததற்கு அளிக்கப்பட்ட அற்பத்தனமான விளக்களில் சரிகண்ட என்.பி.பின். முஸ்லிம் எம்.பி.க்கள், தனியார் சட்டத்தைப் பற்றி பிற அரசியல்வாதிகளால் கூறப்படுகின்ற கருத்துக்களுக்கு ஒரு காத்திரமான விளக்கத்தையேனும் கொடுக்காத அவர்களை பார்க்கின்ற போது, தம்மைச் சார்ந்திருக்கின்ற சமூகத்திற்காக முன்னிற்பார்களா என்ற கேள்வி பலமாக எழுகின்றது

தனித்துவ அடையாள அரசியல் என்ற பதாகையை தூக்கிக் கொண்டு ஒன்றுக்கும் உதவாத அரசியலைச் செய்த முஸ்லிம் தலைவர்கள், முன்னாள் எம்.பி.க்களில் வெறுப்படைந்திருந்த முஸ்லிம் சமூகம், முன்பின் சிந்திக்காமலும் மாற்றம் நடக்கும் என்ற நம்பிக்கையிலும் தமது வழக்கமான அரசியல் நிலைப்பாடுகளில் சில மாறுதல்களை ஏற்படுத்தினர்.

காலகாலமாக மக்களை ஏமாற்றிய பழைய அரசியல்வாதிகளுக்கு இது ஒரு பாடமாக அமைந்தது என்பதை மறுக்க முடியாது. ஆனால், வடக்கு, கிழக்கின் கணிசமான முஸ்லிம்கள் தனித்துவ அரசியலும் தேவை என்ற அடிப்படையில் வாக்களித்திருந்தார்கள் என்பதையும் இவ்விடத்தில் நினைவில் கொள்ள வேண்டியுள்ளது.

இப்போது பெயர் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஓரிரு முஸ்லிம் எம்.பி.க்கள் மட்டும்தான் பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியிலும் சமூக விடயங்களை பேசுவதை காண முடிகின்றது. என்.பி.பி. உள்ளிட்ட பெரும்பான்மைக் கட்சிகளில் தெரிவான பெரும்பாலான எம்.பி.க்கள் அவ்விதம் செயற்படுவதாக தெரியவில்லை.

எல்லாக் கட்சிகளிலும் தெரிவான முஸ்லிம் எம்.பி.க்கள் சமூக விடயங்களை பொதுவான கண்ணோட்டத்தில் நோக்கி, அதற்காக குரல் கொடுக்காவிட்டால், முஸ்லிம் அரசியல் சார்புநிலையில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் எதிர்காலத்தில் சமூகத்திற்கே ஒரு பாடமாக அமைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## கடிதங்கள்

# மக்கள் அவதி



அராலி பாலத்தில் இருந்து அராலி துறைக்கு செல்லும் வீதியில் உள்ள மதகு ஒன்று பாரிய சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

குறித்த வீதியானது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான வீதியாக காணப்படுகிறது. அத்துடன் 789 வழித்தட பேருந்து பயணிக்கும் பிரதான வீதியாக இந்த வீதி காணப்படுகிறது.

கொக்கிரீட்டிலான தகடு உடைந்து, அதற்குள்ளே இருந்த போக்கும் உடைந்தே இந்த குழி தோன்றியுள்ளது.

இந்த வீதியால் அன்றாடம் 789 வழித்தட பயணிகள் சேவை பேருந்து பயணிப்பதுடன், வயோதிகர்கள், பாடசாலை மாணவர்கள், வேலைகளுக்கு செல்வோர் என பல்லாயிரக்கணக்கானோர் பயன்படுத்தும் இந்த வீதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து புனரமைத்து தர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பு.கஜிந்தன்

LMD கணக்கெடுப்பில்

# கொமர்ஷல் வங்கிக்கு முதலிடம்

LMD இன் வருடாந்த வாடிக்கையாளர் சிறப்புக் கணக்கெடுப்பின் 2024 பதிப்பில், இலங்கையின் வங்கிகள் மத்தியில் சிறந்த சேவையை வழங்கி வருவதை முன்னிட்டு கொமர்ஷல் வங்கி முதல்நிலையில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

LMD கணக்கெடுப்பில் வங்கித் துறையில் சிறந்த சேவைக்காக கொமர்ஷல் வங்கியானது தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாக இந்த முதல் ஸ்தானத்தை பெற்றுள்ளது.

இணையத்தள ரீதியாக நடத்தப்பட்ட இந்த கணக்கெடுப்பிற்கு இந்த ஆண்டு 4,100 பதில்கள் கிடைக்கப்பெற்றது. 34 வகையான சேவை நிறுவனங்களில் சிறந்த சேவையை வழங்குவதாக அவர்கள் கருதும் ஸ்தாபனத்திற்கு வாக்களிக்குமாறு பதிலளித்தவர்கள் கேட்கப்பட்டனர்.

கொமர்ஷல் வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி எஸ். பிரபாகர் கருத்துத் தெரிவிக்கையில், 'இந்த வருடத்தை சிறப்புடனும் மகிழ்ச்சியுடனும் பூர்த்தி செய்வதற்கு இந்த விருதானது வழி வகுத்துள்ளது.' 'வாடிக்கையாளர் சேவை என்பது வங்கியில் முதன்மையானது, மேலும் ஒரு தனிப்பட்ட வாடிக்கையாளரின் குறிப்பிட்ட தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட தீர்வுகளை வழங்கும் வங்கியின் திறனை உள்ளடக்கியது. இது எங்கள் பலங்களில் ஒன்றாகும், மேலும் சேவைகளுக்கான டிஜிட்டல் அணுகலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டாலும், தொடர்ந்து கவனம் செலுத்தும் பகுதியாக இது உள்ளது.'

'கொமர்ஷல் வங்கியின் வர்த்தக மூலோபாயத்தின் ஒரு முக்கிய அங்கமாக வாடிக்கையாளரின் நலன் விளங்குகிறது. சேவைகள் மற்றும் தயாரிப்புகளை தொடர்ந்து மேம்படுத்த வாடிக்கையாளர்களின் கருத்துக்களை வங்கி தீவிரமாக ஒருங்கிணைக்கிறது. மேலும் வாடிக்கையாளர்களுக்கு அதிக தனிப்பயனாக்கப்பட்ட நிதியியல் தீர்வுகளை முன்கூட்டியே வழங்குவதற்காக தரவு பகுப்பாய்வுகளையும் பயன்படுத்துகிறது,' என்று திரு



பிரபாகர் கூறினார்.

கொமர்ஷல் வங்கியானது உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட முதல் இலங்கை வங்கியாகும், மேலும் கொழும்பு பங்குச் சந்தையில் வங்கித் துறையில் அதிக சந்தை மூலதனத்தைக் கொண்டுள்ளது. வங்கியானது இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி (SME) துறைக்கு மிகப்பெரிய கடனுதவி வழங்குவதோடு, டிஜிட்டல் புத்தாக்கங்களில் முன்னணியில் உள்ளது. மற்றும் இலங்கையின் முதல் 100% காபன் நடுநிலைமை வங்கியாகும். கொமர்ஷல் வங்கியானது நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள கிளைகள் மற்றும் தானியங்கி இயந்திரங்களின் வலையமைப்பைச் செயல்படுத்துகிறது, மேலும் இலங்கை வங்கிகளுக்கிடையில் பரந்த சர்வதேச வலையமைப்பைக் கொண்டுள்ளது, பங்களாதேஷில் 20 வங்கிக்கிளைகள், மியன்மாரில் ஒரு நுண்நிதி நிறுவனம் மற்றும் மாலைத்தீவில் பெரும்பான்மையுடன் கூடிய முழு அளவிலான முதற்தர வங்கி ஆகியவையாகும். வங்கியின் முழுச் சொந்தமான துணை நிறுவனமான CBC ஃபைனான்ஸ் லிமிடெட் அதன் சொந்த கிளை வலையமைப்பின் மூலம் பரந்த அளவிலான நிதிச் சேவைகளையும் வழங்குகிறது.

SLT–MOBITEL SEA–ME–WE 6

# Submarine Cable பதிப்பை பூர்த்தி

SLT-MOBITEL மாத்தறையில் SEA-ME-WE 6 (Southeast Asia-Middle East-Western Europe 6) submarine cable ஐ வெற்றிகரமாக பதித்துள்ளதாக அறிவித்துள்ளது. அதனூடாக, இலங்கையின் தொலைத்தொடர்பாடல் உட்கட்டமைப்பில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சாதனையை பதிந்துள்ளது. இந்த கேபிள் கட்டமைப்பு 2026 ஆம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து வணிக ரீதியில் இயங்க ஆரம்பிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் Subcom LLC, உடனான கைகோர்ப்பினூடாக மாத்தறையில் SEA-ME-WE 6 கேபிள் பதிக்கப்பட்டுள்ளதுடன், ஸ்ரீ லங்கா ரெலிகொம் பிஎல்சி ஏற்படுத்தியிருந்த சட்டபூர்வ உடன்படிக்கையின் அடிப்படையில் இந்தப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன. அதனூடாக, சர்வதேச மட்டத்தில் இலங்கையின் நிலையை மேலும் வலுப்படுத்துவதாக இது அமைந்துள்ளது.

SLT-MOBITEL அதிகாரிகளான பிரதம செயற்பாட்டு அதிகாரி பிரபாத் அம்பேகொட, செயற்திட்டங்கள் பொது முகாமையாளர் நாலக சிறிவர்தன, போக்குவரத்து வலையமைப்புகள் பொது முகாமையாளர் புத்தி மானகே, வலையமைப்பு உட்கட்டமைப்பு செயற்திட்டங்கள் பிரதி பொது முகாமையாளர் ரொஹான் ஆஷ்டன் மற்றும் SLT செயற்பாட்டு அணியினர் இந்த செயற்பாடுகளை மேற்பார்வை செய்திருந்தனர்.

21,700 கிலோ மீற்றர்கள் நீளமான SEA-ME-WE 6 submarine cable சிங்கப்பூரை பிரானசுடன் இணைக்கின்றது. இதில் ஆசியா மற்றும் மத்திய கிழக்கில் பிரதான இணைப்பு பகுதிகள் காணப்படுகின்றன. உயர் fibre optic தொழினுட்பத்துடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், அதனூடாக 130 Tbps அதிவேக, குறைந்த இழுதிறன் இணைப்பு வழங்கப்படும். இதன் பங்காளராக வலையமைப்புடன் SLT இன் இணைப்பினூடாக, இலங்கையின் சர்வதேச டிஜிட்டல் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதுடன், ஐரோப்பா, மத்தியகிழக்குமற்றும்தெற்காசியா போன்ற பிராந்தியங்களில்



நிலவும் அதிகரித்து செல்லும் இணைப்புத்திறன் கேள்வியை நிவர்த்தி செய்வதாக அமைந்துள்ளது. மேலும், இலங்கையின் டிஜிட்டல் உட்கட்டமைப்பை மேம்படுத்துவது மற்றும் சர்வதேச இணைப்பு ஆற்றல்களுடன் ஒன்றிணைப்பது போன்ற SLT-MOBITEL இன் நோக்கத்தை மேலும் ஒரு படி உயர்த்துவதாக SEA-ME-WE 6 ஸ்தாபிப்பு அமைந்துள்ளது.

குறிப்பாக, இந்தத் திட்டத்தின் போது சூழல் நிலைபேறாண்மை முக்கியத்துவம் பெற்றிருந்தது. அரச திணைக்களங்கள் மற்றும் உள்ளக அதிகார தரப்பினருடன் இணைந்து SLT-MOBITEL செயலாற்றி, சூழலுக்கு பாதுகாப்பான முறையில் இந்த பணியை முன்னெடுத்திருந்தது. கடல் வழி கவனமான முறையில் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக பரந்த சூழல் மதிப்பாய்வுகள் மற்றும் கடல்சார் பாதுகாப்பு கொள்கைகளை கடுமையான வகையில் பின்பற்றியிருந்தமை போன்றவற்றை மேற்கொண்டிருந்தது. மாத்தறை பகுதியில் submarine cable ஐ இணைக்கும் போது சூழல்சார் தாக்கத்தை தணிப்பதற்கு ஏற்கனவே காணப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவனம் பயன்படுத்தியிருந்தது.

SLT-MOBITEL இன் ஏற்கனவே காணப்படும் சர்வதேச இணைப்பு உட்கட்டமைப்புகளான SEA-ME-WE 4 மற்றும் 5, Bharat-Lanka மற்றும் Dhiraagu cables ஆகியவற்றுக்கு மேலதிகமானதாக இந்த புதிய நிறுவுகை அமைந்துள்ளது. SEA-ME-WE 3 ஐ சேவையிலிருந்து நிறுத்தியுள்ளது. நிறுவனம் தொடர்ந்தும் submarine cable கட்டமைப்புகளில் முதலீடுகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதுடன், அதனூடாக தடங்கலில்லாத, உயர் தரம் வாய்ந்த இணைப்பு சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்க எதிர்பார்க்கின்றது.

மேம்படுத்தப்பட்ட வலையமைப்புடன் SLT-MOBITEL' இன் ஒன்றிணைவானது, இலங்கையின் டிஜிட்டல் பொருளாதார ஆற்றல்களை மேம்படுத்த உதவுவதுடன், ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் தெற்காசியா போன்ற நாடுகளுக்கிடையே ஒப்பற்ற தொடர்பாடல்களை ஏற்படுத்த உதவியாக அமைந்துள்ளது. சர்வதேச தொலைத்தொடர்பாடல்களில் இலங்கையை முக்கிய மையமாக திகழச் செய்வதுடன், அதிகரித்து செல்லும் வாடிக்கையாளர் கேள்விகளை நிவர்த்தி செய்யும் வகையில் மூலோபாய விருத்தியை மேற்கொள்வதிலும் நிறுவனம் கவனம் செலுத்துகின்றது.




# காட்டேரிகள்

**எச்.எப்.அப்ரா**
**முதலாம் வருட மாணவி,கலாவெவ,**
**சமூகப்பணி இளங்கலைமானி சிறப்பு பட்டம் (2023/2024)**
**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்**

இலங்கை விரைவாக சிறுவர் துஷ்பிரயோகம் செய்பவர்கள் மற்றும் வக்கிரமானவர்களின் நாடாக மாறி வருவதாகவும், சிறுவர் தலைமுறை வேகமாக பாதுகாப்பற்ற நாடாக மாறி வருவதாகவும் நாம் கூறலாம்.

இதனுடன் சேர்த்து, குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம், பொலிஸார் குழந்தைகள் மற்றும் மகளிர் பணியகம், மகளிர் விவகார அமைச்சகம் போன்ற குழந்தைகள் மற்றும் பெண்கள் மீது விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கக் கூடிய எத்தனை நிறுவனங்கள் இருந்தாலும், இன்றைய சமூகம் எதிர்கொள்ளும் கேள்வி என்னவென்றால் குழந்தைகள், குறிப்பாகப் பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறையை குறைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

எப்படியிருந்தாலும், தங்கள் குழந்தைகளைப் பாதுகாக்கும் இறுதிப் பொறுப்பு பெற்றோருக்குத்தான். இருப்பினும், வறுமை காரணமாக, ஆயிரக்கணக்கான இளம் பெண்கள் சில சமயங்களில் தங்கள் தாய்மார்களையும் தந்தையர்களையும் விட்டுவிட்டு பணக்காரர்களிடம் வேலைக்குச் செல்கிறார்கள், மேலும் அந்தப் பெண்களில் பலர் அந்த வேலைகளுக்கு மேலதிகமாக காமவெறி கொண்ட முதலாளிகளின் ஆசைகளையும் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது.

தங்கள் ஆசைகளை பூர்த்தி செய்ய வயதிற்குட்பட்ட பெண்களை மயக்கி அல்லது வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லும் பல காட்டேரிகள் சமூகத்தில் உள்ளனர். இது சமூக ஊடக நெட்வொர்க்குகள் உட்பட இணையத்திலிருந்து நல்ல ஆதரவைப் பெறுகிறது. நிகழ்நிலை (ஆன்லைன்) கல்வி என்ற போர்வையில் பெரும்பாலான குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் ஆன்லைன் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். எனவே, பெரும்பாலான பொறுப்பை சுமந்து, தங்கள் குழந்தைகளை உன்னிப்பாக கவனிப்பது பெற்றோரின் பொறுப்பு என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது சிறுவர்களின் மனநிலையில் ஏற்படும் வஞ்சகமான, ஆபத்தான அல்லது தவறான நடத்தை, பெரும்பாலும் பராமரிப்பு பற்றாக்குறையுடன் தொடர்புடையது. இது பொதுவாக, ஊட்டச்சத்து பற்றாக்குறை, குடும்பத்தில் அல்லது பள்ளியில் பெற்றோர் அல்லது ஆசிரியர்களிடமிருந்து தேவையான கவனம் மற்றும் வழிகாட்டி குறைபாடு, அல்லது தற்காலிக மனக்கவலைகள் போன்ற காரணங்களால் ஏற்படும்.

இன்றைய உலகில், சிறுவர் துஷ்பிரயோகம் ஒரு பெரும் சமூக பிரச்சனையாகும். உடல், உளவியல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் போன்ற பல்வேறு வடிவங்களில் இது நிகழ்கிறது. இது சிறுவர்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை பெரிதும் பாதித்து, அவர்களின் எதிர்காலத்தை கெடுக்கும். இந்த பிரச்சனையை தீர்க்க, சமூக பணியாளர்களின் பங்கு மிகவும் முக்கியமானது.

முதலில் சிறுவர் துஷ்பிரயோகத்தின் வகைகளை பின்வருமாறு நோக்கலாம்.

அடித்தல், உதைத்தல், எரித்தல் போன்ற உடல் ரீதியான காயங்களை ஏற்படுத்துதல் .சிறுவர்களை அவமதித்தல், பயமுறுத்துதல், புறக்கணித்தல் போன்ற செயல்கள். சிறுவர்களை பாலியல் ரீதியான துன்புறுத்தல் அல்லது சுரண்டுதல். சிறுவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாது இருத்தல். போன்ற முறைகளில் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறார்கள்.

சிறுவர் துஷ்பிரயோகத்திற்கான காரணங்களாக பின்வருவன காணப்படுகின்றன. அவையாவன,

குடும்பத்தில் ஏற்படும் வன்முறை, குழந்தைகளையும் பாதிக்கிறது. வறுமை, வேலையின்மை போன்ற சமூக பொருளாதார பிரச்சினைகள் வன்முறையை அதிகரிக்கச் செய்யலாம். பெற்றோரின் மனநல பிரச்சினைகள், குழந்தைகளுக்கு தீங்கு விளைவிக்கலாம். மது மற்றும் போதைப்பொருள் உபயோகம், தீர்மானங்களை எடுக்கும் திறனை பாதித்து, வன்முறையை ஏற்படுத்தலாம்.

சமூகத்தில் நிலவும் அலட்சியம், சிறுவர் துஷ்பிரயோகத்தை ஊக்குவிக்கலாம்.

மேலும் சிறுவர் துஷ்பிரயோகத்தினால் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் விளைவுகள் பற்றி அவதானிக்கையில்,

சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த பல்வேறு காரணங்கள் உள்ளன. இது பெரும்பாலும் தனிமை, மன அழுத்தம், குடும்பத்தில் தொடர் வன்முறை, உடல் அல்லது மன உளைச்சல் போன்ற காரணங்களால் உருவாகிறது. இவ்வாறு கையாளப்படாத சிறுவர் துஷ்பிரயோகம் எதிர்காலத்தில் பல்வேறு சமுதாய பிரச்சினைகள், குற்றங்கள், மனநிலை சிக்கல்களை உருவாக்குகிறது.

சிறுவர்கள் தம்மை வெளிப்படுத்துவதற்கான முறைகளை அறிவதோ, நல்வழி முறைகளை கற்றுக்கொள்வதோ, உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு தேவையான உதவிகளை பெற்றுக்கொள்வதோ இல்லாதபோது, அவர்கள் அதிக அசாதாரணமான, வன்முறை அல்லது அபாயகரமான செயல்களை புரிந்துகொள்வது சாதாரணமாக இருக்கலாம்.

இதில் காணப்படும் சமூகப் பணியாளர்களின் பங்குகள் பின்வருமாறு,

1. பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஆதரவு:
பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உளவியல் ஆலோசனை, சிகிச்சை மற்றும் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தி தருதல். சிறுவர்கள் தனக்கென இருக்கும் ஆதரவினை உணர்ந்தால், அவர்களுக்குள் அதிக மனச்சோர்வு அல்லது உளவியல் பிரச்சனைகள் ஏற்படாமல் தடுக்க முடியும்.

2. சிறந்த வழிகாட்டல்: சிறுவர்களின் ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் சரியான நடைமுறைகளுக்கு வழிகாட்டுதல் வேண்டும். உதாரணமாக, பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகப் பணியாளர்கள் அவர்களுக்கு அமைதி மற்றும் உள்ளுணர்வு வழங்க வேண்டும்.

3. மனநல ஆலோசனை: சிறுவர்களுக்கு மனநல ஆலோசனைகள் மற்றும் ஆதரவான நிகழ்ச்சிகள் மூலம், அவர்கள் தமக்குள் உள்ள மன அழுத்தங்களை கையாள முடியும். இது துஷ்பிரயோகம் மற்றும் அதனால் ஏற்படும் பல பிரச்சினைகளிலிருந்து சிறுவர்களை விலக்கி விடும்.

4. குடும்பங்களுக்கான ஆலோசனை:
குடும்ப உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கி, வன்முறையை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுதல்.

5.விழிப்புணர்வு ஏற்படுத்துதல்: சமூகத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஊக்குவித்தல்.

6.சட்டப்பூர்வ நடவடிக்கைகள்: தேவைப்படும் சூழ்நிலைகளில், சட்டப்பூர்வ நடவடிக்கைகள் எடுக்க உதவுதல்.

7.சமூக மாற்றம்: சமூகத்தில் நிலவும் கண்ணோட்டங்களை மாற்றி, குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்க உதவுதல்.

இதற்கான கட்டுப்பாடுகளும் எதிர்கால நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும். அவையாவன,

சிறுவர் துஷ்பிரயோகத்தை முற்றிலும் தடுக்க முடியாத போதும், அதனை சரி செய்யும் பணிகளில் சமுதாயம் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும். சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் (பெற்றோர், ஆசிரியர்கள், சமூகப் பணியாளர்கள்) சிறுவர்களின் ஆரோக்கியம் மற்றும் வளரும் வாழ்க்கையை முக்கியமாகக் கையாள வேண்டும்.

இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான சட்டங்கள்:

1939 ம் ஆண்டின் சிறுவர் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம்

1950 ம் ஆண்டின் 47 ம் இலக்கம் பெண்களையும், பிள்ளைகளையும், இளம் ஆட்களையும் தொழிலுக்கு அமர்த்தல் சட்டம்.

மேற்குறிப்பிட்ட சட்டங்களின்படி 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் என வரையறுக்கப்பட்டு உள்ளார்கள்.

எனவே, சமூகப்பணியாளர்கள், இந்த பிரச்சனையை தீர்க்க முக்கிய பங்கு வகிக்கிறார்கள். அவர்கள், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஆதரவாக இருப்பதுடன், சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, நீண்டகால தீர்வுகளை கண்டறிய உதவுகிறார்கள்.

அமெரிக்கா



### லெபனான் – இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தம்

# நீடிப்பு

லெபனான் மற்றும் இஸ்ரேல் இடையேயான போர் நிறுத்த ஒப்பந்தம் பெப்ரவரி 18ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக, வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் தனது துருப்புக்களை திரும்பப் பெறுவதற்கான முந்தைய காலக்கெடுவைத் தவறவிட்டதால், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, "அமெரிக்காவால் கண்காணிக்கப்படும் லெபனான் மற்றும் இஸ்ரேல் இடையேயான ஒப்பந்தம் பெப்ரவரி 18ஆம் திகதி வரை தொடர்ந்து அமுலில் இருக்கும்" என்று, வெள்ளை மாளிகை, சுருக்கமான அறிக்கையில் தெரிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதியன்று, இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலுக்குப் பிறகு பிடிபட்ட லெபனான் கைதிகளை திருப்பி அனுப்புவது தொடர்பாக இஸ்ரேல் மற்றும் லெபனானுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்தும் என்றும், டொனால்ட் ட்ரம்பின் வெள்ளை மாளிகை கூறியது.

இது இஸ்ரேல் மற்றும் லெபனானின் ஹிஸ்புல்லா இடையில் சிறியளவில் சண்டையை ஏற்படுத்தியது.

தற்போது அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கையில், போர்நிறுத்தம் குறித்து வெளிப்படையாக எதுவும் குறிப்பிடப்படவில்லை.



அமெரிக்கா

### அடம் பிடித்த கொலம்பியாவை

# வழிக்கு கொண்டு வந்த ட்ரம்ப்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிய வெளிநாட்டவரை நாடுகடத்துவதில் தீவிரம் காட்டி வருகிறார்.

அமெரிக்காவில் சட்டவிரோதமாகக் குடியேறிய 18,000 இந்தியர்களைத் திரும்பப்பெறுவதாக இந்தியாவும் உடன்பட்டுள்ளது. ஆனால் கொலம்பியா அமெரிக்காவின் நாடு கடத்தல் திட்டத்தை நிராகரித்தது. இதனால் கோபம் தலைக்கேறிய ட்ரம்ப், கொலம்பியா மீது வரி விதிப்பு, விசா இரத்து, பயணிகள் வர தடை உள்ளிட்ட கெடுபிடி உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

முன்னதாக பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்டவர்களை அமெரிக்க அதிகாரிகள் கைதுசெய்து விமானப்படை விமானங்கள் மூலம் அனுப்பி வைத்தனர்.

ஆனால், அகதிகள் அனுப்பி வைக்கப்பட்ட 2 விமானங்களைத் தரையிறங்க கொலம்பியா அனுமதிக்கவில்லை. இதனால் கொதித்த ட்ரம்ப், அந்த நாட்டு பொருட்களுக்கு 25 சதவீதம் இறக்குமதி வரியை உயர்த்தி உத்தரவிட்டார்.

மேலும் இந்த வரி விதிப்பு ஒரு வாரத்தில் 50 சதவீதமாக உயர்த்தப்படும், கொலம்பிய நாட்டு அரசு அதிகாரிகள், அவர்களை சார்ந்தோருக்கான விசா இரத்து, கொலம்பியர்கள் அமெரிக்காவுக்கு பயணிக்க தடை உள்ளிட்ட உத்தரவுகளையும் அவசரகதியில் ட்ரம்ப் பிறப்பித்தார்.

இதற்கு பதிலடியாக, அமெரிக்காவிலிருந்து இறக்குமதி ஆகும் பொருட்களுக்கு 25 சதவீதம் வரியை உயர்த்தி கொலம்பியா ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ உத்தரவிட்டார். "நீங்கள் எங்களுக்கு செய்வதை, நாங்களும் உங்களுக்கு செய்வோம்" என்று, அவர் தெரிவித்தார்.

மேலும், கொலம்பிய அதிகாரிகளின் விசா இரத்து, பயணிக்க தடை உள்ளிட்டவை குறித்து பேசிய குஸ்டாவோ பெட்ரோ, "நான் ஒன்றும் அமெரிக்கா வர விரும்பவில்லை. அது எனக்கு சலிப்பாக இருக்கிறது. நானோ, மற்ற கொலம்பியா நாட்டவரோ, நீங்கள் நினைப்பது போல் மட்டமானவர்கள் அல்ல" என்று தெரிவித்தார்.

இந்நிலையில் கொலம்பியா தனது நிலைப்பாட்டில் இருந்து திடீரென மாறி, அமெரிக்காவில் இருந்து அனுப்பட்ட தங்கள் நாட்டு அகதிகளை ஏற்பதாக அறிக்கை வெளியிட்டுள்ளது.

கொலம்பியா அரசு, ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோவின் வழிகாட்டுதலின் கீழ், நாடு கடத்தும் விமானங்களில் நாட்டுக்கு வரவிருக்கும் சக நாட்டவர்கள் பாதுகாப்பாக திரும்புவதையும், கண்ணியமாக நடத்தப்படுவதையும் உறுதி செய்வதாக, அறிக்கை வெளியிட்டுள்ளது.

எந்த சூழ்நிலையிலும் திரும்ப வந்தவர் வெளியேற்றப்பட மாட்டார்கள் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

இதன்மூலம், கொலம்பியா தன்னிடம் அடிபணிந்ததை அடுத்து, அந்நாட்டின் மீது விதிக்கப்பட்ட 25 சதவீத வரி உயர்வு, விசா இரத்து, பயண தடை ஆகியவற்றை அமெரிக்கா திரும்பப்பெற்றுள்ளது.

இதேவேளை, மெக்சிகோ நாடும் தங்கள் அகதிகளை திரும்பப்பெற்றுள்ள நிலையில், தங்கள் நாட்டவரை விமானத்தில் தண்ணீர் கொடுக்கால், ஏசி இல்லாமல், கைவிலங்கிட்டு அமெரிக்கா கீழ்த்தரமாக நடத்தியுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளது.

காஷ்மீர்

### 'திரால் சவுக்' பகுதியில்

# முதன்முறையாக பறந்த இந்திய தேசிய கொடி



ஜம்மு மற்றும் காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் உள்ள திரால் சவுக் பகுதியில், முதன்முறையாக இந்திய தேசிய கொடி பறக்க விடப்பட்டுள்ளது.

இந்திய நாட்டின் 76ஆவது குடியரசு தின கொண்டாட்டங்கள் டெல்லியில் உள்ள கர்தவ்யா பாதை (கடமை பாதை) பகுதியில், ஞாயிற்றுக்கிழமை (26) நடைபெற்றன.

இந்த சூழலில், ஜம்மு மற்றும் காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் உள்ள திரால் சவுக் என்ற பகுதியில் முதன்முறையாக இந்திய தேசிய கொடி பறக்க விடப்பட்டுள்ளது.

இந்த கொடியை 3 தலைமுறையை சேர்ந்தவர்கள் சேர்ந்து ஏற்றியுள்ளனர்.

இதுபற்றி இந்திய இராணுவம் வெளியிட்ட செய்தியில்,

"வயோதிபர் ஒருவர், இளைஞர் மற்றும் ஒரு சிறுவர் ஆகியோர் சேர்ந்து கொடியை ஏற்றினர். தலைமுறைகளின் ஒற்றுமை மற்றும் தேசத்துக்கான பகிரப்பட்ட உள்ளார்ந்த ஈடுபாடு ஆகியவற்றை இது வெளிப்படுத்துகிறது.

உத்தரகாண்ட்

# பொதுசிவில் சட்டம் அமுல்

உத்தரகாண்ட்டில், பொதுசிவில் சட்டம், நேற்று (27) முதல் அமுலுக்கு வந்துள்ளது.

இந்தியாவில் மதத்தின் அடிப்படையில் சிவில் சட்டங்கள் உள்ளன. திருமணம், விவாகரத்து, தத்தெடுப்பு, சொத்துரிமை உள்ளிட்ட பல்வேறு தனி நபர் உரிமைகள் தொடர்பாக அந்தந்த நபர்களின் மதத்திற்கு ஏற்ப சிவில் சட்டங்கள் உள்ளன. தனி நபர் தான் பின்பற்றும் மதத்திற்கு ஏற்றார்போல் சிவில் சட்டங்கள் உள்ளன.

அதேவேளை, நாட்டில் உள்ள அனைவருக்கும் பொதுவான சிவில் சட்டம் கொண்டுவர வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அதேபோல், பொது சிவில் சட்டத்திற்கு பலர் எதிர்ப்பும் தெரிவித்து வருகின்றனர்.

இதனிடையே, உத்தரகாண்ட் மாநிலத்தில் பாஜக ஆட்சி நடைபெற்று வருகிறது. கடந்த 2022ஆம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலின்போது, மாநிலத்தில் மீண்டும் ஆட்சி அமைத்தால் பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்படும் என பாஜக வாக்குறுதி அளித்தது.



### இரண்டாவது டெஸ்டில்

# பாகிஸ்தானை வீழ்த்திய மேற்கிந்தியத் தீவுகள்

பாகிஸ்தானுக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், முல்தானில் சனிக்கிழமை (25) ஆரம்பித்து திங்கட்கிழமை (27) முடிவுக்கு வந்த இரண்டாவது டெஸ்டை 120 ஓட்டங்களால் மேற்கிந்தியத் தீவுகள் வென்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை பாகிஸ்தான் வென்ற நிலையில் தொடர் 1-1 என சமநிலையானது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

மே. தீவுகள்: 163/10 (துடுப்பாட்டம்: குடகேஷ் மோட்டி 55, ஜோமெல் வொரிக்கான் ஆ.இ 36, கேமார் றோச் 25, கவெம் ஹொட்ஜ் 21 ஓட்டங்கள். பந்துவீச்சு: நொமன் அலி 6/41, சஜிட் கான் 2/64, கஷிஃப் அலி 1/16, அப்ரார் அஹ்மட் 1/24)

பாகிஸ்தான்: 154/10 (துடுப்பாட்டம்: மொஹமட் றிஸ்வான் 49, செளட் ஷகீல் 32 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜோமெல் வொரிக்கான் 4/43, குடகேஷ் மோட்டி 3/49, கேமார் றோச் 2/15)

மே. தீவுகள்: 244/10 (துடுப்பாட்டம்: கிறேய்க் பிறத்வெய்ட் 52, டெவின் இம்லாச் 35, அமிர் ஜாங்கூ 30, கெவின் சின்கிளேயர் 28 ஓட்டங்கள். பந்துவீச்சு: சஜிட் கான் 4/76, நொமன் அலி 4/80, கஷிஃப் அலி 1/23, அப்ரார் அஹ்மட் 1/45)

பாகிஸ்தான்: 133/10 (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 31, மொஹமட் றிஸ்வான் 25 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜோமெல் வொரிக்கான் 5/27, கெவின் சின்கிளேயர் 3/61, குடகேஷ் மோட்டி 2/35)

போட்டியின் நாயகன்: ஜொமெல் வொரிக்கான்

தொடரின் நாயகன்: ஜொமெல் வொரிக்கான்

### ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# வலென்சியாவை வென்ற பார்சிலோனா




ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், தமது மைதானத்தில் திங்கட்கிழமை (27) அதிகாலை நடைபெற்ற வலென்சியாவுடனான போட்டியில் 7-1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வென்றது.

பார்சிலோனா சார்பாக பெர்மின் லொபேஸ் இரண்டு கோல்களையும், பிரெங்கி டி ஜொங்க், பெரன் டொரஸ், றபீனியா, றொபேர்ட் லெவன்டோஸ்கி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றதோடு, மற்றைய கோல் ஓவ்ண் முறையில் பெறப்பட்டிருந்தது.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 49 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட் காணப்படுகின்றது. 45 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் அத்லெட்டிகோ மட்ரிட்டும், 42 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் பார்சிலோனாவும், 40 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அத்லெட்டிக் பில்பாவோவும் காணப்படுகின்றன.

### இத்தாலிய சீரி ஏ தொடர்:

# பியொரென்டினாவை வென்ற லேஸியோ

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், லேஸியோவின் மைதானத்தில் திங்கட்கிழமை (27) அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் பியொரென்டினா வென்றது.

பியொரென்டினா சார்பாக யசினே அடில், லூகாஸ் பெல்ரன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, லேஸியோ சார்பாகப் பெறப்பட்ட கோலை அடம் மருசிச் பெற்றிருந்தார்.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 53 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நாப்போலி காணப்படுகின்றது. 50 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான இன்டர் மிலனும், 46 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லாண்டாவும், 39 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் லேஸியோவும் காணப்படுகின்றன. இதில் மற்றைய அணிகளை விட இன்டர் மிலன் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.



### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# டொட்டென்ஹாமை வென்ற லிஸ்டர்



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (26) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் லிஸ்டர் சிற்றி வென்றது.

லிஸ்டர் சார்பாக ஜேமி வார்டி, பிலால் எல் கன்னூஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, டொட்டென்ஹாம் சார்பாகப் பெறப்பட்ட கோலை றிஷலிஷன் பெற்றார்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 53 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் காணப்படுகின்றது. 47 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், 44 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நொட்டிங்ஹாம் பொரெஸ்டும் காணப்படுகின்றன. நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி, நியூகாசில் யுனைட்டெட் ஆகியன தலா 41 புள்ளிகளுடன் காணப்படுகின்றபோதும் கோலெண்ணிக்கை வித்தியாசத்தில் நான்காமிடத்தில் மன்செஸ்டர் சிற்றியும், ஐந்தாமிடத்தில் நியூகாசிலும் காணப்படுகின்றன. இதில் மற்றைய அணிகளை விட லிவர்பூல் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.

### அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடர்:

# ஸ்வ்ரேவ்வை வென்று சம்பியனான சின்னர்



அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரில் உலகின் முதல்நிலை வீரரான ஜனிக் சின்னர் சம்பியனானார்.

ஞாயிற்றுக்கிழமை (26) நடைபெற்ற இறுதிப் போட்டியில் இரண்டாம் நிலை வீரரான அலெக்ஸான்டர் ஸ்வ்ரேவ்வை எதிர்கொண்ட இத்தாலியின் சின்னர் 6-3, 7-6 (7-4), 6-3 என்ற நேர் செட்களில் வென்று சம்பியனானார்.

தனது அரையிறுதிப் போட்டியில் ஐக்கிய அமெரிக்காவின் பென் ஷெல்டனை சின்னரும், ஆறாம் நிலை வீரரான நொவக் ஜோக்கோவிச்சை வென்று ஜேர்மனியின் ஸ்வ்ரேவ்வும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 28, ஜனவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.